வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 28.12.2024 சனிக்கிழமை இதழ் : 362 பக்கங்கள் : 12




# தமிழர் உரிமையை பாதுகாக்கும் புதிய அரசமைப்பே வரவேண்டும்!

## ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, டிசெம்பர் 28

**புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி ஆட்சி முறைமைக்கு நேரடியாக எதிர்ப்பு தெரிவித்தார். தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி அனுரகுமாரவிடம் நான் வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை துரிதப்படுத்துவதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. பல தசாப்தகாலமாக புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்படுகிறது. இருப்பினும் எந்த அரசாங்கங்களும் புதிய அரசியலமைப்பை உருவாக்கவில்லை. முதலாளித்துவத் தரப்பினர் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்பவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

யுத்தம் முடிவடைந்தவுடன் அரசியலமைப்பின் 11

## தேசிய தைப்பொங்கல் விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்!

கொழும்பு, டிசெ. 28

எதிர்வரும் வருடம், தேசிய தைப்பொங்கல் விழாவை இந்த முறை யாழ்ப்பாணத்தில் நடத்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, தேசிய தைப்பொங்கல் விழாவை எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 11

## ஏப்ரல் 5 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்?

கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 05 ஆம் திகதி நடத்துவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

குறித்த தேர்தலுக்காக ஏற்கனவே பெறப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்துவிட்டு, புதிதாக வேட்பு மனுக்களை கோருவதற்கான சட்ட திருத்தம் எதிர்வரும் ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்நிலையில் உள்ளூராட்சிச் சபைத் 11

## தேசிய புலனாய்வுப் பிரிவின் காணி கோரிக்கை நிராகரிப்பு!

### வவுனியா ஒருங்கிணைப்பு கூட்டத்தில்

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 28

தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு அலுவலகம் அமைப்பதற்காக வவுனியா நகரப் பகுதியில் காணி கோரப்பட்ட நிலையில் அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

காணியற்ற அரச திணைக்களங்கள், தேசிய புலனாய்வு அலுவலகம் மற்றும் பொது 11



## இலங்கை - இந்திய மீனவர் இனிமேல் பேச்சு இல்லை

### அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், டிசெ. 28

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையே இனிமேல் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் இடம்பெறாது எனக் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் அமைச்சர் நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர், "ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டபோது இலங்கை - இந்திய மீனவர்களிடையே ஒரு மனிதாபிமானமான தீர்மானம் 11

## உள்ளூர் உற்பத்தி அரிசி போதியளவு கையிருப்பில்

### விலையில் மாற்றங்கள் இல்லை

### யாழ்.வணிகர் கழகத் தலைவர்

யாழ்ப்பாணம், டிசெ. 28

உள்ளூர் உற்பத்தி அரிசி இனங்கள் போதிய அளவு கையிருப்பில் இருக்கின்றது. விலையில் மாற்றங்கள் இல்லை. தென்னிலங்கை மாவட்டங்களில் இருந்து வட மாகாணத்துக்கு வரும் அரிசியை விற்கமுடியாது என யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ப.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்.வணிகர் கழகத்தில், யாழ்ப்பாணம் 11

## வெடுக்குநாறிமலையில் தமிழர் நிம்மதியாக வழிபட வழி செய்க!

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

வவுனியா, டிசெ. 28

வவுனியா வடக்கு - ஒலுமடு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் தமிழ்மக்கள் நிம்மதியான முறையில் வழிபடுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். 11

## அரிசி பற்றாக்குறை இனிமேல் ஏற்படாது

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

எதிர்காலத்தில் அரிசிப் பற்றாக்குறை ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது என்பதுடன், எதிர்வரும் போகத்தின் அறுவடையுடன் குறிப்பிடத்தக்க அளவு அரிசி கையிருப்பை பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார். 11

## மருத்துவத்துறையில் ஏற்பட்ட நெருக்கடிக்கு உடனடித் தீர்வு!

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

மருத்துவத்துறையில் ஏற்பட்ட நெருக்கடிக்கு உடனடித் தீர்வு எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பேரணியொன்றின் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுகாதாரத்துறை எதிர்கொண்டுள்ள சர்வதேச முதல் 10 அச்சுறுத்தல்களில் சர்வதேச நுண்ணுயிர்க் கொல்லி அச்சுறுத்தலும் ஒன்றாகும். 11

## அநுர தலைமையின் கீழ் இலங்கை ஒளி மயமான எதிர்காலம் நோக்கி!

### சீனத் தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கி பயணிக்குமென தாம் நம்புவதாக தெரிவித்துள்ள இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென் ஹொங், இலங்கை மக்களுக்களின் வளமான வாழ்வுக்கு இயலுமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் சீனா வழங்குமென உறுதியளித்தார். 11

## அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு; அரசிடம் வெளிப்படை வேண்டும்

### உதய கம்மன்பில கோரிக்கை

கொழும்பு, டிசெ. 28

அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். சந்தர்ப்பத்துக்கு ஏற்றாட் போல் அரசியல் கொள்கையை ஜனாதிபதி மாற்றிக் கொள்ள கூடாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற தொழிற்சங்க 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகர் தமிழ்ச்செல்வன் மீது தாக்குதல் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்

## உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

கொழும்பு, டிசெ. 28

சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் குறித்து நீதியான விசாரணைகள் இடம்பெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இந்தக் கடிதத்தில் குறிப்பிடத்தப்பட்டுள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் மீது கிளிநொச்சி நகரில் தாக்குதல் நடத்தி வானில் கடத்தும் முயற்சியொன்று 26.12.2024 அன்று மாலை இடம்பெற்றுள்ளதாக அவர் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

கடமை நேரத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த தமிழ்ச்செல்வனை பின்தொடர்ந்து வந்திருந்த வான் யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் வழிமறித்து இவ்வாறு கடத்தலை முன்னெடுக்க முற்பட்டுள்ளது.

கடத்தல்காரர்களிடமிருந்து தப்பித்து செல்ல முயன்ற தமிழ்ச்செல்வன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயங்களுடன் அவர் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் அழிப்பு மற்றும் பரவி வரும் போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தியமை மற்றும் தகவல் அறியும் சட்டமூலத்தில் தகவல்களை பெற்று பல ஊழல்களை வெளிப்படுத்த முயன்றமையின் காரணமாக தாம் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளப்பட்டுள்ளதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் முயற்சியை இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. தம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வானை செலுத்திவந்த சாரதியை அடையாளம் காட்ட முடியும் என தமிழ்ச்செல்வன் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் உரிய விசாரணையை மேற்கொண்டு அவருக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுடன், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தமது பணியை முன்னெடுக்கும் சூழ்நிலையை வடமாகாணத்தின் மாவட்டங்களில் ஏற்படுத்த பாதுகாப்பு தரப்பினர் பணியாற்ற வேண்டும் என இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# யாழில் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் - பொம்மை வெளிப் பகுதியில் வைத்து 120 மில்லிக்காராம் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 28

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வியாழக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்று வெள்ளிக்கிழமை வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 289 ரூபா 49 சதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன் விற்பனை விலை 298 ரூபா 29 சதமாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் 5 எஸ் திட்டத்தின் கீழ் செயல்பாடு

முல்லைத்தீவு, டிசெ. 28

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச பொலிஸ் நிலையம், 5 எஸ் திட்டத்தின் கீழ் செயற்படும் முன்மாதிரி பொலிஸ் நிலையமாக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு சிறந்த வினைத்திறனான சேவையினை வழங்கும் நோக்குடன் பொலிஸ் மா அதிபரின் எண்ணக்கருவின் ஒரு அங்கமான, பொலிஸ் நிலையங்களை 5 எஸ் திட்டத்துக்கு கொண்டுவரும் செயற்பாடு நாடு பூராகவும் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில், அதன் ஒரு அங்கமாக வடக்கு மாகாணத்தில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் 5 எஸ் திட்டத்தின் கீழ் செயற்படும் முன்மாதிரி பொலிஸ் நிலையமாக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் நிலையத்தினை வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.ஏ.தனபால திறந்து வைத்து பார்வையிட்டதுடன், கலந்து கொண்ட அதிதிகளால் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இறுதியில் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த டீ சில்வா, யாழ்ப்பாண பிரதி பொலிஸ் மா அதிபர் சி.தனபால, முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.ஜி.சந்திரசேன, நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சித் பமுனுசிங்க, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பிஆர். ஹெரத், ஒட்டிசுட்டான் பிரதேச வைத்தியசாலை வைத்தியர், பாடசாலை அதிபர், சமூக பொலிஸ் பிரிவினர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம சேவையாளர்கள், பொது சுகாதார பரிசோதகர், பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# சந்தை வாய்ப்புகளை பெருக்கினால் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.28

விவசாயிகளின் பொருட்களின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதுடன் அவர்களுக்கான சந்தை வாய்ப்பை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக பெருமளவான விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நவீன தொழில் நுட்ப பங்களிப்புடன் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், விவசாயத்துடன் தொடர்புடைய அரச அலுவலர்கள் களத்துக்குச் சென்று விவசாயிகளின் பிரச்சனைகளை ஆராய வேண்டும்.

சியாப் திட்டத்தின் கீழ் எமது மாகாணத் துக்கு அடுத்த ஆண்டு 100 கோடி ரூபாய் நிதி கிடைக்கவுள்ள நிலையில் அதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். எந்தவொரு காரணத்துக்காகவும் அந்த நிதி செலவழித்து முடிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார். (எ)

# வவுனியா நகர்ப்புற ஆசிரியர்களுக்கு செல்வாக்கை பயன்படுத்தி இடமாற்றம்

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - ஜெகதீஸ்வரன் எம். பி

வவுனியா, டிசெ.28

அதிகாரிகள் வவுனியா நகர்ப் புறத்தில் இருக்கும் ஆசிரியர்களை காப்பாற்றி செல்வாக்கை பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பில் கடுமையான நடவடிக்கை களை எடுக்க வேண்டி வரும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் எச்சரித்துள்ளார்.

வவுனியா செட்டிகுளத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

செட்டிகுளம் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. நகர்ப்புற பாடசாலைகளில் பலவற்றில் மேலதிகமாக பல ஆசிரியர்கள் உள்ளனர். ஏன் நகர்ப்புறப் பகுதியில் உள்ள ஆசிரியர்களை பின்தங்கிய பிரதேசத்துக்கு அனுப்ப முடியாமல் உள்ளது. செட்டிகுளம் பிரதேசத்தில் கடமையாற்றும் சில ஆசிரியர்கள் 8 வருடங்கள் கடந்தும் இடமாற்றம் வழங்கப்படாமல் உள்ளனர். ஆனால், நகர்ப்புறப் பாடசாலைகளில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் நகர்ப்புற பாடசாலைகளுக்கே சுழற்சி முறையில் இடமாற்றமாகி செல்கின்றனர்.

ஏன் அந்த ஆசிரியர்களை தூரப் பிரதேசங்களுக்கு அனுப்பக் கூடாது. தொடர்ச்சியாக தூரப் பிரதேசத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஏன் விமோசனம் கொடுக்கக் கூடாது. இங்கு கூடுதலான அதிகாரிகள் நகர்ப்புறத்தில் இருக்கும் ஆசிரியர்களை காப்பாற்றி செல் வாக்கை பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பில் நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கக வேண்டி வரும்- என்றார். (எ-10)

# அரசின் எதிர்காலம் கேள்விக்குறியில்!

## ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, டிசெ. 28

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயல்பாடுகளுக்கு எதிராகப் போராடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- முன்னால் கியரை போட்டால் அது பின்னால் தான் அரசாங்கத்துக்கு விழுகிறது. சுற்றறிக்கைகளை மாற்றியமைக்கும் நிலைக்கு அரசாங்கத்தின் நிலைமை தள்ளப்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் உருவான அரசாங்கம் ஜூலை மாதத்தில் கவிழ்க்கப்பட்டது. 2001இல் நாம் அமைத்த அரசாங்கம் 2004 இல் வீழ்ந்தது. கோட்டாபய, மூன்று வருடங்களுக்குள் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது. எதிர்காலம் எவ்வாறு இருக்கும் எனக் கணிக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து அரசாங்கத்தின் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு எதிராக போராடுவோம். எதிர்க்கட்சிகள் அனைத்தும் எம்முடனே இருக்கின்றன - என்றார். (அ)

# மிகவும் அரிதான மாணிக்கக் கல் இறக்குவானையில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, டிசெ. 28

இரத்தினபுரி இறக்குவானை பிரதேசத்தில் மாணிக்கக் கல் அகழ்வு ஆராய்ச்சியின் போது உலகில் மிகவும் அரிதான மாணிக்கக் கல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல் ஸ்கோப் போலைட் கெட்ஸ் ஐ சன்ஸ் ஸ்டோன் (சூரியக்கல்) என ஆராய்ச்சியின் போது அறியப் பட்டுள்ளது.

இது சூரியனுடைய கல் என்றும் மிகவும் அதிஷ்ட கல் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் இந்தக் கல் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.12.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## கற்பனைத் தீர்வு

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா பேசாமல் இருந்தால் அதனால் மகிழ்சியடையலாம் என்றும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் அதனை நிராகரித்திருக்கின்றனர் எனவும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தெரிவித்திருக்கின்றார். ஆனால் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்த நிலைப்பாட்டை பெரும்பான்மையான தமிழ் மக்கள் நிராகரித்திருந்தனர்.

இம்முறை மட்டுமல்ல, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய காலத்திலிருந்து பெரும்பான்மையான தமிழ் மக்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் நிலைப்பாட்டை எதிர்த்தே வந்திருக்கின்றனர். ஜனநாயக கண்ணோட்டத்தில் நோக்கினால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸை தமிழ் மக்கள் ஒரு பிரதான தரப்பாக ஒரு போதுமே ஏற்றுக்கொண்டதில்லை.

இதற்குமப்பால் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளையே நிராகரித்திருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் தேசியவாத கட்சிகள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோரை பெரும்பான்மையான தமிழ் மக்கள் விரும்பவில்லை என்னும் முடிவுக்கே வரவேண்டியிருக்கும். இந்த நிலையில் தமிழ் மக்கள், 13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை எந்த அடிப்படையில் வாதிட முடியும்?

இங்கு பிரச்னை வேறு. யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட, தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்துவந்த தமிழ் தேசிய கட்சிகள் என்பவை, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் எதனையும் நிரூபிக்கவில்லை. ஆனால் இந்த விடயத்தை இருப்பதிலிருந்து முன்னோக்கிச் செல்லுதல் என்னுமடிப்படையில் நேர்மையாகக் கையாண்டிருந்தால், மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய சில மாற்றங்களை நிச்சயம் சாதித்திருக்க முடியும். ஆனால், அவற்றைவிடுத்து தொடர்ந்தும் எதைச் செய்ய முடியாதோ அதனையே தமிழ் தேசிய கட்சிகள் என்போர் மக்களுக்குள் திணிக்க முற்பட்டனர். இப்போதும் அதனையே செய்ய முயற்சிக்கின்றனர். இவ்வாறான போலியரசியல் மீது மக்கள் அதிருப்தியடைந்துவிட்டனர். அவர்கள் அதிருப்தியின் விளிம்புக்கு சென்றுவிட்டனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசுவதா அல்லது இல்லையா என்பது உண்மையில் இந்தியாவின் பிரச்னையில்லை. இந்தியா அதனைப் பேசாதுவிட்டால் இந்தியாவிற்கு எந்தவொரு நஷ்டமும் இல்லை. இந்தியா அதனை கண்டுகொள்ளாது விட்டால், கொழும்பு தான் விரும்பியவற்றை ஒரு தடையுமின்றி செய்துவிட்டுப் போகலாம். கொழும்பின் நகர்வுகளை தடுக்கும் சிறிய வல்லமைகூட தமிழ் தேசியம் பேசும் கட்சிகளிடம் இல்லை.

அரசாங்கம் ஒரு புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசிவருகின்றது. அந்த அரசியலமைப்பில் 13இல் இருப்பதை விடவும் கூடுதலாக அதிகாரங்களை உள்ளடக்குமாறு நிர்ப்பந்திக்கும் ஆற்றல் தமிழர் தரப்புக்களிடம் இருக்கின்றதா - அப்படியிருக்கின்றது என்றால் அந்த ஆற்றல் என்ன? ஒன்றில் வெளிநாடு ஒன்றின் தலையீடு நிகழ வேண்டும். அப்படியொரு நாடு இருக்கின்றதா? - இந்தியாவை மீறி அவ்வாறானதொரு நாடு இருக்க முடியுமா? இந்தியாவின் எல்லை என்ன என்பது பற்றி இந்தியா தெளிவாக எடுத்துரைத்துவிட்டது. இதன் பின்னர் தமிழர் தரப்பால் என்ன செய்ய முடியும்? ஒரு நிர்ப்பந்தம் இல்லாமல் கொழும்பு தமிழர் விடயத்தில் கரிசனை காண்பித்ததாக வரலாறில்லை. மாகாண சபை இன்றுவரையில் இருப்பதற்கு இந்தியாவின் கடைக்கண் பார்வைதான் காரணம். அதனையும் வேண்டாம் என்றால் நஷ்டம் யாருக்கு?

# நிலைபேறான நல்லிணக்கத்துக்கு சகல சமூகங்களையும் அரவணைக்கும் ஆட்சிமுறை அவசியம்

ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

இன, மத சிறுபான்மைச் சமூகங்களிடம் இருந்தும் கணிசமான ஆதரவைப் பெற்று ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் அரசாங்கம் பெற்ற வெற்றி நீண்டகாலப் பிரச்னை களையும் மனக்குறைகளையும் கையாளுவதற்கு அதற்கு கிடைத்த ஆணையின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது.

தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வாக்காளர்கள் தங்களது பிரச்னைகளை நேரடியாக தீர்த்து வைக்கும் பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். உருப்படியான நடவடிக்கைகள் மூலமாக அந்த நம்பிக்கைக்கு பதிலளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

“சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சகவாழ்வின் ஊடாக அமைதியான பன்முக இலங்கை ஒன்றைக் கட்டியெழுப்புதல் ” என்ற தலைப்பிலான அண்மைய மகாநாடு ஒன்றில் தேசிய ஒருங்கிணைப்பு பிரதியமைச்சர் முனீர் முலாபரின் பங்கேற்பு இங்கையில் சகல சமூகங்களையும் தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறைக்கான அவசரத் தேவையை வலியுறுத்தியது.

சகல மதங்களினதும் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்விமான்கள் மற்றும் இராஜதந்திரிகள் உட்பட 150 இற்கும் அதிகமானவர்கள் அந்த மகாநாட்டில் பங்கேற்றார்கள்.

அமைச்சர் முலாபரின் உரை தேசிய ஒருங்கிணைப்பு மீதான அரசாங்கத்தின் கடப்பாட்டை மீளவலியுறுத்தியதுடன் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதில் சிவில் சமூகத்தின் முக்கியத்துவத்தையும் அழுத்திக்கூறியது.

சிறந்த இலங்கைக்கான மகாசங்கம் மற்றும் தேசிய சமாதானப் பேரவை உட்பட வேறு சிவில் அமைப்புக்களுடன் கூட்டாக போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த அந்த மகாநாடு சமூகங்கள் மத்தியிலான இடைவெளியை நிரவுவதிலும் சமூகத்தின் அடிமட்டங்களில் புரிந்துணர்வை வளர்ப்பதிலும் சிவில் சமூகம் வகிக்கக்கூடிய பாத்திரத்தை வெளிக்காட்டியது.

மகாநாட்டுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை அரசியல் சீர்திருத்தம், நிலைமாறுகால நீதி, சமத்துவ உரிமைகள், மலையக தமிழர்கள் முகங்கொடுக்கும் அநீதிகள் மற்றும் நல்லாட்சி என்று முக்கியமான விவகாரங்கள் மீது கவனத்தைச் செலுத்தியது. இந்த விரிவான கட்டயைப்பு நீதியானதும் ஐக்கியப்பட்டதுமான இலங்கை ஒன்றுக்கான சகல சமூகங்களினதும் அபிலாசைகளைப் பிரதிபலித்தது.

இலங்கையைப் போன்ற பல இனங்களையும் பல மதங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் சகல சமூகங்களையும் அரவணைப்பது என்பது வெறுமனே அடையாளபூர்வமானதாக இருக்கமுடியாது. அது பல்வேறுபட்ட கருத்துக் கோணங்களையும் நோக்குகளையும் கையாள்வதற்கும் பரஸ்பர புரிந்துணர்வை வளர்ப்பதற்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட தூய்மையான இலங்கைக்கான ( Presidential Task Force for Clean Sri Lanka ) ஜனாதிபதி செயலணி போன்ற முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களின் உறுப்பினர்களாக தமிழ்,முஸ்லிம் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டியது முக்கியம் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அத்தகைய ஒரு பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் எந்த சமூகங்களின் மனக்குறைகள் ஒப்புரவான முறையில் தீர்க்கப்படவேண்டியவையாக இருக்கினறனவோ அந்த சமூகங்களினாலேயே செயலணி புறக்கணிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது.

இந்த சமூகங்கள் பல பிரச்னைகளுக்கு முகங்கொடுக்கின்றன. வடக்கையும் கிழக்கையும் சேர்ந்த தமிழ்க் குடும்பங்கள் இழந்துபோன தங்களது நிலங்களுக்காகவும் காணாமல்போன தங்கள் உறவினர்களுக்காகவும் தங்களது சொந்த மொழியில் அரசுடன் தொடர்பாடலைச் செய்வதற்கான தங்களது உரிமைக்காகவும் தொடர்ந்து நீதியை வேண்டி நிற்கின்றன.

சுதந்திரத்தின் பின்னரான பாகுபாடுகளின் விளைவான பிரச்னைகளினால் இன்னமும் கூட அவலப்பட்டுக் கொண்டிருக்கும் மலையகத் தமிழர்கள் தங்களுக்கு நிலத்தையும் வீடுகளையும் வழங்குவதற்கான கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்படுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குடியேற்றத் திட்டங்கள், காணிச்சீர்திருத்த நடவடிக்கைகள், பத்து இலட்சம் வீட்டுத் திட்டங்கள் போன்ற பாரிய வீடமைப்பு திட்டங்கள் போன்ற பல்வேறு மூலோபாயங்களை பயன்படுத்தி நிலமற்றோரின் பிரச்னைகளுக்கு தீர்வுகள் காணப்பட்ட நீண்ட வரலாறு ஒன்றை இலங்கை கொண்டிருக்கிறது.

இந்த பிரச்னைகளைக் கையாளுவதை சிறிய, அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளில் தொடங்குவதன் மூலமாக நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் என்பதுடன் பெரியளவிலான சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்கவும் முடியும்.

மேற்காண்டு கலந்தாலோசனைகளை நடத்துவதன் மூலமும் இருதரப்பு கருத்தொருமிப்பை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மூலமும் தேசிய நல்லிணக்கம் என்பது அரசியல் போட்டிகளினால் இடைஞ்சலுக்கு உட்படுத்தப்படாமல் சகல சமூகங்களினதும் முன்னுரிமைக்குரிய விவகாரமாக மாறுவதை உறுதிப்படுத்துவதில் சிவில் சமூகம் நாட்டம் கொண்டிருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதிலும் வேறு முற்போக்கான நடவடிக்கைகளை எடுப்பதிலும், ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க வெளிக்காட்டியிருக்கும் பற்றுறுதி நம்பிக்கையை தருகிறது. இந்த முயற்சிகள் நிலைபேறான நல்லிணக்கமாக நடைமுறையில் மாறுவதற்கு ஆட்சிமுறையில் சகல சமூகங்களின் பங்கேற்பையும் அரசாங்கம் அரவணைக்க வேண்டியது அவசியம் என்பதுடன் இலங்கையின் பன்முக அடையாளத்தைப் பிரதிபலிக்கும் ஓர் ஆட்சிமுறை வகை மாதிரியையும் பின்பற்ற வேண்டும். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக போய் முடியும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். லாபம் குறையும்.

**இடபம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரர் வகையில் நன்மை உண்டு. சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மிதுனம்**
வழக்கில் சாதகமாக் தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**கடகம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**சிம்மம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளியூரிலிருந்துவரவேண்டியபணத்தைபோராடிவசூலிப்பீர்கள்.

**கன்னி**
உங்களிடம் பழகும் நண்பர், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். அழகும் இளமையும் கூடும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உங்களைப் பற்றி சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப் படாதீர்கள். அவசர முடிவுகளை தவிர்க்கவும்.

**தனுசு**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதரர் வகையில் மனத்தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மகரம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.


**மீனம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர் மறை சிந்தனைகள் பிறக்கும். குடும்பத்தில் சல சலப்புகள் வரும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும்.

# மகளிருக்கான சிகிச்சை நிலையத்தை பார்வையிட்ட என். பி. பி. எம். பிக்கள்

கிளிநொச்சி, டிசெ.28

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட தேசிய மக்கள் சக்தி (என். பி. பி.) பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீ பவானந்தராஜா மற்றும் ஜெ. றஜீவன் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு சென்றனர்.

இதன்போது, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் நெதர்லாந்து நாட்டின் நன்கொடை மற்றும் மென் கடன் மூலம் 5000 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மகளிருக்கான சிறப்பு சிகிச்சை நிலையத்தை பார்வையிட்டு அதனை முழுமையாக இயங்கச்செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.



அத்துடன் மருத்துவமனையின் செயல்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கத் தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் ஆளணி எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வினோதன் மற்றும் கிளிநொச்சி பொது மருத்துவமனை பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-05)

# யாழ்ப்பாணம் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய வருடாந்த உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வு கழகத் தலைவி உ. தர்ஷினி தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்கஅதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து சிறப்பித்தார். (எ- 05)




# பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் விற்பனை கண்காட்சி கிளிநொச்சியில்

கிளிநொச்சி, டிசெ.28

பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் கிளிநொச்சி, பரந்தன் பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன், கிளிநொச்சி மாவட்டச் செயலக பெண்கள் பிரிவு மற்றும் மாவட்ட மகளிர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் குறித்த கண்காட்சியை திறந்து வைத்தார்.

மேலும், தொழில் முயற்சியாளர்களை இணையவழி சந்தைப்படுத்தலில் இணைக்கும் செயல்பாடும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (எ)

# ஏ-9 வீதியில் பெரும் பள்ளங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.28

ஏ - 9 வீதியில் எழுதுமட்டுவாலுக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பெரும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால், வாகனங்களை செலுத்திச் செல்லும் சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த பள்ளங்களால் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் மக்கள் குறிப்பிட டுள்ளனர்.

எனவே, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு பள்ளங்களை நிரவி சீர்செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ- 05)



# ஆங்கில கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.28

ஜே. கே. சி. மற்றும் எஸ். எல். ரி. சி. ஆகிய நிறுவனங்களின் இணை அனுசரணையில் நடைபெற்ற ஆங்கில கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும்நிகழ்வு சுதுமலை குபேரமஹால் மண்டபத்தில் நடைபெற்றது.




ஜே. கே. சி. நிறுவன இயக்குநரும், முன்னாள் மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளருமாகிய அ. ஜெபநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமல்பே சோபித தேரர் அநுரவுக்கு புகழாரம்!

**அனுராதபுரம் அரச வைத்தியசாலையில் தாயாருக்கு சிகிச்சை அளித்தமைக்காக**

கொழும்பு, டிசெ. 28

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தாயார் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது ஒரு அற்புதமான நிகழ்வு எனவும், இது நாம் எதிர்பார்த்த அமைப்பு மாற்றம் எனவும் வணக்கத்திற்குரிய ஓமல்பே சோபித தேரர் புகழாரம் சூட்டியுள்ளார்.**

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் உள்ளக நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் ஜனாதிபதியின் தாயாரின் உடல்நிலையை பார்வையிடச் சென்றதன் பின்னர் மருத்துவமனைக்கு அருகில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இன்று நாம் அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் 18 ஆவது விடுதியில் உள்ள நோயாளர் ஒருவருக்கு ஆசி வழங்குவதற்காக வருகை தந்துள்ளோம். அந்த நோயாளி வேறு யாருமல்ல தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தாயார் ஆவார். அவருக்கான பிரார்த்தனையில் அத்தங்கனே ரதனபால தேரரும் என்னுடன் இணைந்து கொண்டார்.

நாட்டின் ஜனாதிபதியின் தாயார் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதை சமீபகால வரலாற்றில் விசித்திரமான நிகழ்வு என்று கூறலாம். தனது தாயாரை ஜனாதிபதி தனது கிராமத்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிப்பது முன்னுதாரணமான செயல் என்றே கூறவேண்டும்.

இதற்கு முன்னர், பிரதான அரசியல்வாதிகளின் உறவினர்கள் கொழும்பு பிரதான மருத்துவமனையிலோ அல்லது வெளிநாட்டிலோ சிகிச்சை பெற்று வந்தமை, கடந்த அரசாங்கத்தின் மக்கள் நம்பிக்கையை குலைக்கும் வகையில் செயற்பட்டதாகவே கருத முடியும்.

அரச தலைவரின் இந்த உதாரணத்தை அனைத்து அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்களும் கூடுமானவரை பின்பற்ற வேண்டும்-என்றார் அவர். (அ)

# வாய்த்தர்க்கத்தினால் குடும்பஸ்தர் கொலை

கொழும்பு, டிசெ. 28

புத்தளம் - முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்களவெளி கிராமத்தில் உள்ள இறால் பண்ணையில் வேலை செய்துவந்த குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இறால் பண்ணையில் வேலை செய்து வந்த உயிரிழந்த நபர், மதுபோதையில் காணப்பட்டுள்ளார். அவருக்கும், அங்கு தொழில் புரிந்துவந்த மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, ஆத்திரமடைந்த நபர், மதுபோதையில் இருந்த குடும்பஸ்தரை அங்கு இருந்த மண்வெட்டி ஒன்றினால் பலமாக தாக்கிக் காயப்படுத்தியுள்ளதுடன், பல இடங்களில் வெட்டியும் கொலை செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த 37 வயதுடைய 03 பிள்ளைகளின் தந்தையான ராஜேந்திரன் ராஜசேகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

அத்துடன், சம்பவ இடத்துக்கு வருகை தந்த புத்தளம் பதில் நீதிவான் வஸீம் ராஜா, சம்பவ இடத்தில் நீதவான் விசாரணையை நடத்தியதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், இந்த கொலை சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸாரும், புத்தளம் பொலிஸ் தடயியல் பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# போக்குவரத்துச் சபைக்கு 43 மில்லியன் ரூபா இழப்பு

கொழும்பு, டிசெ. 28

நிறுவனக் கோட்பாட்டை மீறி எட்டு தொழிற்சங்கங்களுக்கு 138 திறந்த பயண அனுமதிச் சீட்டுகளை வழங்கியதால், 2023 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சுமார் 43 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ரயில்வே திணைக்களத்தினால், இந்த தொழிற்சங்கங்களுக்கு 22 இலவச ரயில் பயண அனுமதிச் சீட்டுகளை ஒதுக்கியதன் விளைவாக, அதே ஆண்டில் அரசாங்கத்திற்கு 25 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கூறுகிறது.

நாடு முழுவதும் வழங்கப்படும் இந்த இலவச பயண அனுமதிச் சீட்டுகளை பெறுவதற்கு தொழிற்சங்க அதிகாரிகளுக்கு உரிமை உண்டு.

இருப்பினும், எட்டு தொழிற்சங்கங்களுக்கு 138 பயண அனுமதிச் சீட்டுகளை வழங்குவது அனுமதிக்கப்பட்ட வரம்பை கணிசமாக மீறிய செயல் என்றும், இது, கணிசமான நிதி இழப்புகளுக்கு வழி வகுத்தது என்றும் கணக்காய்வாளர் நாயகம் கண்டறிந்துள்ளார். (அ)


# இலங்கையின் வடிவில் அபூர்வ இரத்தினக்கல்!

கொழும்பு, டிசெ. 28

இலங்கையின் வடிவிலான அரிய இயற்கை நீலக்கல் ஒன்றை வர்த்தகர் ஒருவர் கொள்வனவு செய்ததாக அறிவித்துள்ளார்.

இரத்தினபுரி நிவித்திகல பிரதேசத்தை சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரே குறித்த இரத்தினக் கல்லைக் கொள்வனவு செய்துள்ளார்.

நீல இரத்தினக்கல்லை கரவிட்ட இரத்தினக்கல் சேகரிக்கும் ஒருவரிடம் கொள்வனவு செய்ததாக வர்த்தகர் ரொஹான் வசந்த தெரிவித்தார்.



இலங்கையின் நிலத் திட்டத்தையும் யாழ்.குடாநாடு எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பத

குறித்த இரத்தினக்கல்லில் இலங்கையின் நிலத் திட்டத்தையும் யாழ்.குடாநாடு எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் பார்க்கலாம்.

மன்னார், திருகோணமலை உட்பட இலங்கையின் நான்கு திசைகளும் அதில் காட்சியளிக்கின்றன.

இரத்தினக்கல் மற்றும் நகைகள் அதிகார சபையிடம் குறித்த இரத்தினக்கல் சமர்ப்பிக்கப்பட்டு, கடந்த 24ஆம் திகதியன்று அடையாளச் சோதனை அறிக்கை பெறப்பட்டது.

இந்த 5.37 கரட் எடையுள்ள இரத்தினக்கல் இயற்கையான கொருண்டம் இனத்தைச் சேர்ந்ததெனக் குறிப்பிடப்படுகின்றது. (அ)

# அஸ்வெசும பெறாது ஏழ்மை உள்ள மாணவர்களுக்கும் 6 ஆயிரம் ரூபா!

கொழும்பு, டிசெ. 28

அஸ்வெசும பயனாளர் குடும்பத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும், அஸ்வெசும கொடுப்பனவு பெறாது ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கும் 6000 ரூபா நிவாரண தொகை வழங்கப்படும். கல்வி அமைச்சின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிள்ளைகளின் கல்வி மீதான சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதற்கமைய அஸ்வெசும பயனாளர்களின் குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் பாடசாலை தவணையை முன்னிட்டு பாடசாலை கற்றல் உபகரணங்கள் மற்றும் பெற்றுக் கொள்வதற்கு 6000 ரூபா வழங்கப்படும்.

அதேபோல் அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்குள் உள்ளடங்காத ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கும் இந்த 6000 ரூபா நிவாரண தொகை வழங்கப்படும். கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு பாதனி வழங்குவதற்கு பின்பற்றப்பட்ட வழிமுறை இந்த திட்டத்திலும் செயற்படுத்தப்படும். கல்வி அமைச்சின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

# தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிக்காத 10 பேருக்கு எதிராக விசாரணை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 28

தேர்தல் ஒழுங்கு சட்டத்தின் விதிகளின்படி, வருமானம், செலவு விவரங்களை முறையாக சமர்ப்பிக்காத மூன்று ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களை நியமித்த கட்சியின் செயலாளர்கள் உட்பட 10 பேருக்கு எதிராக கொழும்பு மோசடி விசாரணைப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, பதில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில், கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினர் இது தொடர்பான விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் பாக்கியசெல்வம் அரியநேத்திரன், பத்தரமுல்லை சீலரத்ன தேரர் மற்றும் சரத் கீர்த்திரத்ன முதலான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகம்பொடி பிரசங்க சுரஞ்சீவ அனோஜ் டி சில்வாவை ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்பட்ட ஜன நாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஆரியவன்ச திசாநாயக்க, ஜயந்நீச வீரசிங்க முதியன்சேலகே ஜனக பிரியந்த குமார ரத்நாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக பெயரிட்ட, ஐக்கிய இலங்கை தேசியக் கட்சியின் செயலாளர் சரச்சந்திர வீரவர்தன, ராஜபக்ஷ ஆராச்சிலாவிலாகே நாமல் அஜித் ராஜபக் ஷவை, ஜனாதிபதி வேட்பாளராக பெயரிட்ட சமபிமா கட்சியின் செயலாளர் தீப்தி குமார குணரத்ன, சங்கைக்குரிய பத்தரமுல்லே சீலரத்ன தேரரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் சங்கைக்குரிய பத்தரமுல்லே சீரதன தேரர், அபுபக்கர் மொஹமட் இன்பாஸை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்த, ஐக்கிய ஜனநாயகக் கூட்டமைப்பின் செயலாளர் இசட்.எம். ஹிதாய துல்லா உள்ளிட்ட 05 கட்சியின் செயலாளர்கள் தொடர்பாகவும் இவ்வாறு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு 1 மாதம் நீடிக்கும்!

## பிரதி அமைச்சர் ருவன் செனரத்

கொழும்பு, டிசெ. 28

**அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்தார்.**

அரிசிக்கான தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலையின்மேல் தொடர்ந்து, மக்களிடமிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்ற போது, பெரும்பாலான நெற் களஞ்சிய சாலைகள் தனியாரின் கட்டுப்பாட்டில் இருந்தன. இந்த பிரச்னைக்கு முன்னைய அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வை சமாளிக்க, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார். (அ)

# கட்டார் எயார்வேஸ் விமானத்தில் உயிரிழந்தார் இலங்கைப் பெண்!

கொழும்பு, டிசெ. 28

கட்டாரின் டோஹாவில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பரிஸ் நோக்கி பயணித்த விமானத்தில் திடீர் சுகயீனமடைந்த இலங்கையைச் சேர்ந்த பெண் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டார் எயார்வேஸ் விமானத்தில் பயணித்த பெண்ணுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், ஈராக்கில் உள்ள எர்பில் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து மருத்துவக் குழுக்கள் விமான நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சிகிச்சை அளிக்க முற்பட்டது. எனினும் அவர் ஏற்கனவே விமானத்தில் உயிரிழந்துள்ளமை பின்னர் கண்டறியப்பட்டது.

பிரான்சில் தங்கியிருந்த 81 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

எர்பிலில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் இது தொடர்பாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அவரது மகனுக்குத் அறிவிக்க ஏற்பாடு செய்திருந்தது.

உயிரிழந்தவரின் சடலத்தை பிரான்ஸுக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. (அ)

# விமானப்படை சிப்பாய் கைது

கொழும்பு, டிசெ. 28

பஸ் ஒன்று விற்பனைக்கு இருப்பதாகக் கூறி சமூக ஊடகங்களில் விளம்பரங்களைப் பதிவிட்டு ஹோட்டல் உரிமையாளர் ஒருவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா மோசடி செய்த தாகக் கூறப்படும் விமானப் படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் களுத்துறை, ஹந்தபான்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய விமானப்படை சிப்பாய் ஆவார்.

சந்தேக நபரான விமானப் படை சிப்பாய் பஸ் ஒன்று விற்பனைக்கு இருப்பதாக கூறி சமூக ஊடகங்களில் விளம்பரங்களைப் பதிவிட்டுள்ள நிலையில், குருநாகல் - மெல்சிறிபுர பிரதேசத்தில் வசிக்கும் ஹோட்டல் உரிமையாளர் ஒருவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று பஸ்ஸை வழங்காமல் மோசடி செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஹோட்டல் உரிமையாளர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரான விமானப்படை சிப்பாயைக் கைது செய்துள்ளனர். (அ)

# ரயில் சேவையை நாளாந்தம் 70 வீதமாக அதிகரிக்க திட்டம்

கொழும்பு, டிசெ. 28

ரயில்வே சேவையை நாளாந்தம் 70 வீதமாக அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜெயசுந்தர தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் புதிய பொது முகாமையாளராக தம்மிக்க ஜெயசுந்தர நேற்று முன் தினம் பதவியேற்றார்.

பதவியேற்பு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளராக என்னை மீண்டும் நியமித்தமைக்காக அமைச்சரவை அமைச்சர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னைப் பொறுத்தவரை, மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் நிறுவனமாக ரயில்வே துறையை மாற்ற வேண்டும். மக்களுக்கு உகந்த சேவையை வழங்க வேண்டும்.

ரயில்வே துறை மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஒரு முக்கிய நிறுவனமாகும்.

அரசாங்கத்தின் புதிய கொள்கைகளின்படி, நாளாந்த பொதுமக்களின் பயணத்தை எளிதாக்கும் வகையில் ரயில் சேவையை 70 வீதமாக அதிகரிக்கும் திட்டம் உள்ளது.

ரயில்வே துறைக்குள் சில நெருக்கடிகளும் சிக்கல்களும் உள்ளன.

அவற்றை விரைவில் நிவர்த்தி செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்-என்றார். (அ)

# மேலதிக வகுப்பு மாணவர்களிடம் கையடக்க தொலைபேசிகள் திருட்டு

கொழும்பு, டிசெ. 28

கண்டி பிரதேசத்தில் உள்ள மேலதிக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் கையடக்கத் தொலைபேசிகளை திருடியதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கண்டி பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கண்டி பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கண்டி, தலதா வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கண்டி, கட்டுகஸ் தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் பஸ் தரிப்பிடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் உள்ள மேலதிக வகுப்பு மாணவர்கள் மற்றும் ஏனைய நபர்களின் கையடக்கத் தொலைபேசிகளை திருடி அதனை கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களில் குறைந்த விலைக்கு விற்பனை செய்து பணத்தைப் பெறுவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், திருடிய கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளரும் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# நெவில் பெர்ணான்டோ வைத்தியசாலையை துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 28

மாலபேயில் உள்ள வைத்தியர் நெவில் பெர்ணான்டோ வைத்தியசாலையைத் தரமான வைத்தியசாலையாக உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குறித்த வைத்தியசாலைக்கு களவிஜயத்தை மேற்கொண்ட பின்னர் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் வைத்தியசாலை யொன்றுக்கு மேற்கொண்ட முதலாவது கள விஜயம் இதுவாகும்.

இதன்போது, அமைச்சர் வைத்தியசாலையின் சகல பிரிவுகளையும் பார்வையிட்டதுடன், எதிர்கால திட்டங்கள் தொடர்பில், அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடியதாகச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீன பல்கலை மாணவர்கள் குழு ஆய்வுக்காக இலங்கை வருகை

கொழும்பு, டிசெ. 28

ஹொங்கொங் சீனப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 16 இளங்கலை மாணவர்கள் ஆய்வுப் பயணத்தில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு 10 நாள் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் குழு நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த மாணவர்கள் "இலங்கையில் பெண்களின் உரிமைகள்" என்ற தலைப்பில் ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டு ஆய்வுக் கட்டுரை ஒன்றை தயாரிக்க உள்ளனர்.

இது தவிர ஜா-எல, பமுனுகம கொன்சால்வ்ஸ் கல்லூரியின் 50 மாணவர்களின் உதவியுடன் மற்றுமொரு செயற்திட்டத்தையும் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வுப் பயணத்தின் பின்னர், இந்த மாணவர்கள் சீகிரியா மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களுக்கு சுற்றுலா செல்லவும் திட்டமிட்டுள்ளனர்.

மேலும், இந்த 10 நாள் விஜயத்தில் குறித்த மாணவர்கள் குழுவுக்கு தேவையான வசதிகளை கிறிஸ்தவ இளைஞர்கள் சங்கம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மது போதையில் வாகனம் செலுத்தினால் சாரதி அனுமதி 12 மாதம் இடைநிறுத்தம்?

கொழும்பு, டிசெ. 28

மது போதையில் வாகனம் செலுத்தியமைக்காக கைது செய்யப்படும் நபர்களின் சாரதி அனுமதி உரிமத்தை 12 மாதங்களுக்கு இடைநிறுத்த நீதிமன்றின் அனுமதியை கோருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, மது போதையில் வாகனம் செலுத்துவதை தவிர்க்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதவேளை, நேற்று முன் தினம் காலை 06.00 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மது போதையில் வாகனம் செலுத்தியமைக்காக கைதான 395 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், பொலிஸாரின் விசேட கண்காணிப்பு சோதனையின்போது, கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 50 சாரதிகளும், அதிவேகமாக வாகனம் செலுத்திய 120 பேரும், போக்குவரத்து விதிகளை மீறிய 1262 பேரும், சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான குற்றங்களுக்காக 682 பேரும், மற்ற போக்குவரத்து விதிகளை மீறிய 5441 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் மொத்தம் 7950 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழு , போதை வியாபாரிகளிடம் சம்பளம் வாங்கும் பொலிஸ் அலுவலர்கள்!

## பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கொழும்பு, டிசெ.28

**பாதாள கோஷ்டி மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளிடம் சம்பளம் பெறும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர். அவர்களின் உதவியுடனே இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. பேலியகொடை மீன் சந்தையிலிருந்தே கொழும்புக்கு போதைப்பொருள் விநியோகிக்கப்படுகின்றன என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.**

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,பாதாள நடவடிக்கை மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தின் கீழ் சம்பளம் பெறும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர்.

இவர்களின் பாதுகாப்புடனே இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதன் பிரகாரமே கடந்த வாரம் பேலியகொடை மீன் சந்தைக்குச் சென்று, அந்த வியாபாரிகளுடன் கலந்துரையாடி அவர்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கியிருந்தேன்.

சில கிராமங்களில் ஒட்டுமொத்த பொலிஸ் நிலையமும் போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் ருவன்வெல்லவில் உள்ள முழு பொலிஸ் படையையும் நாங்கள் இடமாற்ற வேண்டியிருந்தது. புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்த தீர்மானத்தினை எடுக்க வேண்டியிருந்தது. அது மட்டுமல்ல, அவிசாவளையில் ஒரு குழுவும் உள்ளது, அவர்கள் ஒரு வலையமைப்பின் ஊடாக சேர்ந்துள்ளனர்.

அதனால் நாங்கள் இது தொடர்பாக பொலிஸ் மா அதிபரை அழைத்துக் கலந்துரையாடினோம். பாதாளக் கோஷ்டி தலைவர் மத்துகமவில் இருக்கிறார். இதை ஒரு பிரச்னையாகவே பார்க்கிறோம். பாதாள கோஷ்டியையும் போதைப்பொருள் கடத்தலையும் இல்லாதொழிக்க எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு முன் வெளிப்படுத்த முடியாது.

அத்துடன் கொழும்புக்குள் போதைப்பொருள் விநியோகிக்கும் மத்திய நிலையங்களில் ஒன்றாக பேலியகொடை மீன் விற்பனை நிலையம் இருந்து வருகின்றது.

அங்கு தற்போது மீன் வியாபாரம் பதுக்கப்பட்டு போதைப்பொருள் வியாபாரமே தலைதூக்கி இருக்கிறது. இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

பல்வேறு பகுதிகளிலிருந்து மீன் கழிவுகளை கொண்டுவந்து உரம் அமைப்பதாகத் தெரிவித்து ஒரு வேலைத்திட்டம் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் மீன் கழிவுகளைக் கொண்டுவரும் அந்த பெட்டிகளில் போதைப்பொருளே இருப்பதாக எமக்கு தகவல் கிடைத்தது. மீன் கழிவுகளைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு யாரும் விருப்பம் இல்லை. அதனால் பொலிஸாரின் அறிவுறுத்தலுடனே இந்த நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

கடந்த அரசாங்க காலங்களில் 250 இற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அரசியல் ரீதியிலேயே பொலிஸ் பொறுப்பதிகாரி நியமனம் வழங்கப்பட்டிருப்பதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்ன தெரிவித்திருந்தார்.

அவ்வாறான பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடனே எங்களுக்கு பணியாற்ற வேண்டி இருக்கிறது. அதேநேரம் இந்த போதைப்பொருள் கடத்தல் வியாபார வலையமைப்பின் மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

அதனால் போதைப்பொருள் வியாபாரத்தின் இறுதிப் பகுதியைப் பிடித்துக்கொண்டு, அதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நடவடிக்கை எடுத்தாலும் போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்தும் அவ்வாறே இடம்பெற்று வருகின்றன.

அதனால் அரசியல்வாதிகளையும் கைது செய்ய நாங்கள் தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மீண்டும் பாதாள உலக சம்பவங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. இதில் குறுகிய சந்தர்ப்பவாத அரசியலும் உள்ளது-என்றார்.

(அ)

# மெண்டிஸ் மீண்டும் அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான யோசனை முன்வைப்பு

கொழும்பு, டிசெ. 28

மெண்டிஸ் மதுபான உற்பத்தி நிறுவனத்தின் நிலுவை வரித் தொகையில் 50 சதவீதத்தை செலுத்துமாயின், தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள மதுபான உற்பத்தி அனுமதிப்பத்திரத்தை மாதாந்த அடிப்படையில் வழங்க முடியுமென மதுவரி திணைக்களம் அந்த நிறுவனத்திடம் யோசனை முன்வைத்துள்ளது.

குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

வரையறுக்கப்பட்ட டபிள்யூ. எம். மெண்டிஸ் நிறுவனம் செலுத்த வேண்டிய வரியில் 5 .7 பில்லியன் ரூபாய் நிலுவை காணப்படுவதனால் இந்த நிறுவனத்தின் மதுபான உற்பத்தி அனுமதிப்பத்திரத் தைக் கடந்த 5ஆம் திகதி முதல் இடைநிறுத்துவதற்கு மதுவரி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது(அ)

# கடலில் மூழ்கிய ஐவர் மீட்பு

கொழும்பு, டிசெ. 28

ஹிக்கடுவை, நரிகம சுற்றுலா கடற்கரையில் நீராடச் சென்ற போது நீரில் அடித்துச் செல்லப்பட்ட நான்கு சிறுவர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் ஐவர் பொலிஸ் உயிர்காப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

நான்கு குழந்தைகள் மற்றும் ஒரு பெண் மீட்கப்பட்டதாகவும், அவர்கள் ரஷ்ய மற்றும் கொலம்பிய பிரஜைகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை நீராடியுள்ளனர். அவர்கள் கடலலையில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் மற்றும் ஏழு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உடனடியாக தலையிட்டு குழுவினரை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

மீட்கப்பட்டவர்கள் 12, 09 மற்றும் 04 வயதுடைய குழந்தைகளும் அடங்குவர். (அ)

# மருந்துகள் தர பரிசோதனையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 28

மருந்துகள் தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தரநிலை பரிசோதனைகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் தரத்தில் எவ்வித பிரச்னையும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

(அ)

# பண்டிகைக் காலத்தில் சுகாதாரப் பாதுகாப்பில் மக்கள் அதிக கவனத்துடன் செயல்படவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 28

பண்டிகைக் காலத்தில் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனத்துடன் செயற்படுமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

பட்டாசு கொளுத்தல், வாகனம் செலுத்தல் போன்ற செயற்பாடுகளின்போது கவனத்துடன் செயற்படுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புதுவருட கொண்டாட்டத்தின்போது பட்டாசுகளால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறைந்தளவிலேயே பதிவாகியிருந்ததாகவும் சமில் விஜேசிங்க கூறினார்.

பட்டாசு கொளுத்தும் சிறுவர்கள் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்

அதேநேரம், கவனயீனமாக வாகனம் செலுத்தல், அதிவேகம், மதுபோதையில் வாகனம் செலுத்தல் போன்ற குற்றச்செயல்கள் தவிரக்கப்பட வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் சமில் விஜேசிங்க அறிவுறுத்தியுள்ளார். (அ)

# முன்னாள் அமைச்சர்கள் ஐவர் குறித்து விசாரணை

கொழும்பு, டிசெ. 28

பாரிய நிதி மோசடி மற்றும் கொலைச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய ஐந்து முன்னாள் அமைச்சர்களின் விசாரணைகளை துரிதப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மீளப்பெற்றப்பட்டு நீதிமன்றில் நிராகரிக்கப்பட்ட பல வழக்குகளை மீள் விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை உரிய சட்ட பிரிவு மேற்கொண்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சரை ஏமாற்றிய நபர்!

## 17 புதிய கடவுச்சீட்டுகளுடன் தலைமறைவு

கொழும்பு, டிசெ. 28

நபர் ஒருவர் தன்னையும் தனது அமைச்சின் அதிகாரிகளையும் பணியாளர்களையும் ஏமாற்றிவிட்டு 17 புதிய கடவுச்சீட்டுகளுடன் தப்பியோடியுள்ளார் என பிரதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

தனது அலுவலகத்துக்கு முதல் தடவை விஜயம் மேற்கொண்டவேளை இந்த சம்பவம் இடம்பெற்றது என அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நான் அமைச்சின் அலுவலகத்துக்குள் முதல் தடவை நுழைந்ததும்,நபர் ஒருவர் என்னை அமைச்சின் பல பிரிவுகளுக்கு அழைத்துச் சென்று காண்பித்தார். நான் அவர் அமைச்சை சேர்ந்தவராகயிருப்பார் என நினைத்தேன்.

நான் அவர் அமைச்சின் பணியாளர் என நினைத்தேன். ஆனால் அவர் தன்னை இணைப்புச் செயலகம்



பிரதியமைச்சரின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுவதற்காக அனுப்பியதாக அமைச்சுப் பணியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் தேநீர் விருந்துபசார நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த நபர் அதனை ஏற்பாடு செய்வதில் மும்முரமாக செயற்பட்டார்.என்னை அவர் அமைச்சின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்றார்.

கடவுச்சீட்டை தயாரிக்கும் பகுதிக்கு என்னை அழைத்துச் சென்ற நபர் இதுவரை எந்த அமைச்சரும் அங்கு வரவில்லை என குறிப்பிட்டார்.

மறுநாள் எனக்கு ஒரு தகவல் கிடைத்தது. எனது அலுவலகப் பணியாளர்கள் என்னை பாராட்டி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கவேண்டும் என இந்த நபர் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்ற தகவல் எனக்கு கிடைத்தது.

அவர் எனது அலுவலகப் பணியாளராக பணியாற்றுவதற்கு பொருத்தமற்றவர் என எனக்கு தெரிவித்திருந்தனர்.

விசாரணைகளின்போது அந்த நபர் எனது அமைச்சுடன் தொடர்பில்லாதவர் என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட நபர் 17 கடவுச்சீட்டுகளுடன் அமைச்சின் அலுவலகத்திலிருந்து வெளியேறியதும் தெரியவந்துள்ளது.

அமைச்சர் கடவுச்சீட்டுகளை பெறச் சொன்னார் என தெரிவித்தே அவர் கடவுச்சீட்டுகளை பெற்றுள்ளார்.

அந்த நபர் நிசாந்த என அடையாளம் காணப்பட்டுள்ளார் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல் வெளியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம்

## பொலிஸாரால் கண்டுபிடிப்பு



சம்மாந்துறை, டிசெ.28

**நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்த்தி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டதுடன் கைதான சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை தம்பி நாயகபுரம் பகுதியில் உள்ள வயல்வெளியில் பொலிஸாரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீண்டகாலமாக சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டிபிடிக்கப்பட்டது. குறித்த நிலையத்தை நடத்தி வந்த 31 வயது நபரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து ஒரு தொகுதி கசிப்பு, கோடா, ஹாஸ் சிலிண்டர், ஹாஸ் அடுப்பு , 20 லீற்றர் கொள்கலன்கள், இரும்பு பரள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

# பெரும் மாற்றங்களுடன் கிழக்கு இலக்கிய விழா

திருகோணமலை, டிசெ. 28

இந்த ஆண்டு வரை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்பட்டு வந்த அரச உத்தியோகத்தர்களுக்கான படைப்பாக்கம் மற்றும் கலை இலக்கிய போட்டி நிகழ்வுகளானது 2025ஆம் ஆண்டு முதல் திறந்த

போட்டியாக மாற்றியமைக்கப்பட்டு நடத்தப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்கி கௌரவிப்பதற்காகவும், அதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் கலை இலக்கிய செயல்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும் பின்வரும் தமிழ்மொழி மூல போட்டி நிகழ்வுகளில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து தமிழ் மொழிமூல எழுத்தாளர்களும், இலக்கிய செயல்பாட்டாளர்களும், ஏனைய ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியும். போட்டி நிகழ்வுகள்,

1. புதுக்கவிதை 2. மரபுக் கவிதை, 3. சிறுகதை 4. குறும் பட பிரதியாக்கம், 4. புகைப் படம் 5. பட்டி மன்றம், 5. ஓவியம் 6. கரோகி பாடல், 7. கிராமிய நடனம் 8. கலப்பு நடனம், மேற்படி நிகழ்வுக்கான போட்டி நிபந்தனைகளையும்

விண்ணப்ப படிவங்களும் கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள

கலாசார உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ)

# கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையராக அஸ்மி நியமனம்

திருகோணமலை, டிசெ. 28

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக ஏ. எல். எம். அஸ்மி நியமிக்கப்பட்டுள்ளார்.

திணைக்களத் தலைவர்களுக்கான புதிய நியமனம் வழங்கும் நிகழ்வு திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர இந்த நியமனத்தை வழங்கினார். (எ)

# நற்பிட்டிமுனை தமிழர் வரலாற்று சால்புகள் நூல் வெளியீடு இன்று

கல்முனை, டிசெ.28

சஞ்சீவி சிவகுமார் எழுதிய நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்று சால்புகள் எனும் வரலாற்று நூலின் வெளியீட்டு விழா இன்று 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் வெளியீடாக வெளிவரும் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அதன் தலைவர் க. ருத்திரமூர்த்தி தலைமை தாங்குகிறார். இந்த விழாவில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே அதிசயராஜ், எழுத்தாளர் உமா வரதராஜன் மற்றும் வரலாற்று ஆய்வாளர் வெல்லவூர்க் கோபால் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ)

# "பொலிஸார் - பொதுமக்கள் நல்லுறவு மிகவும் அவசியம்"

காரைதீவு, டிசெ.28

சமூகத்தில் அவ்வப்போது எழும் குற்றச்செயல்களை தடுக்க பொலிஸார், பொதுமக்கள் நல்லுறவு மிகவும் அவசியம். அதற்கு இவ்வாறான உபதேசக் குழுக்கள் மேலும் வலுச்சேர்க்கும் என்பது எனது நம்பிக்கை- இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற மக்கள் பாதுகாப்பு உபதேசக்குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய அக்கரைப்பற்று அம்பாறை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி. பண்டார தெரிவித்தார்.

காரைதீவு பொலிஸ் பிரதேசத்துக்கான மக்கள் பாதுகாப்பு உபதேசக்குழுக் கூட்டம் காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜகத் தலைமையில் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,மக்கள் சுதந்திரமாக - நிம்மதியாக -பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதற்காக பொலிஸார் சேவையாற்றி வருகின்றனர். இருப்பினும், பொதுமக்களின் ஒத்துழைப் பில்லாமல் அது 100 வீதம் சாத்தியமாகாது. எனவே, பொதுமக்கள் பொலிஸார் உறவு மிக முக்கியானது.

போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப் படும். அதற்கு பொதுமக்களின் உதவி கட்டாயம் தேவை.

உபதேச குழுக்களின் வகிபாகம் மிக முக்கியமானது. இதன் அதிகாரம் வரையறையற்றது.



முழுப் பொலிஸ் நிலையத்தையே கண்காணிக்கலாம்.

நான் திருக்கோவிலில் இருந்தபோது அங்குள்ள உபதேச குழுவே என்னைக் காப்பாற்றியது.

சட்டவிரோத செயல்பாடுகளையும் போதைப்பொருள் கடத்தலையும் காரைதீவு பிரதேசத்தில் முற்றாகத் தடை செய்ய வேண்டும்- என்றார்.(எ)

# கடற்கரை பூங்கா புனரமைப்பு ஆணையாளர் கண்காணிப்பு

கல்முனை, டிசெ.28

கல்முனை மாநகர சபையால் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற சாய்ந்தமருது கடற்கரைப் பூங்காவுக்கு கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, அங்கு முன்னெடுக்கப்படும் புனரமைப்பு பணிகளை மீளாய்வு செய்த அவர், அவற்றின் தரம் குறித்து கூடிய அவதானம் செலுத்தியதுடன் சம்மந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவன முகாமையாளருடன் ஆலோசனைகளை பரிமாறிக் கொண்டார்.

சிறுவர்களின் விளையாட்டரங்காகவும் பெண்கள்



உள்ளிட்ட பொது மக்களின் பொழுது போக்குமிடமாகவும் காணப்படுகின்ற இந்த பூங்காவின் அனைத்து கட்டுமானங்களும் சூழலும் மிகவும் பாதுகாப்பானவையாகவும் தரமானவையாகவும் அமையப் பெற வேண்டும் என்று ஆணையாளர் நௌபீஸ் இதன்போது அறிவுறுத்தினார். (எ)

# விநாயகபுரம் மயானத்தில் பிரேத மாடம் திறந்து வைப்பு



திருக்கோவில், டிசெ.28

திருக்கோவில் விநாயகபுரம் மயானத்தில் பிரேதத்தை வைத்து கிரியைகளை செய்வதற்கான மாடம் ஒன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது.

சுனாமி நினைவேந்தல் நாளன்று இந்த மாடம் திறந்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 432 பேர் இந்த ஆழிப்பேரலையில் அள்ளுண்டு சென்றனர். அவர்களுடைய ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள் பெரிய முகத்துவாரம் தம்பிலுவில் மற்றும் திருக்கோவிலில் உயிர்நீர்த்தவர் இல்லம் ஆகியவற்றில் நடைபெற்றன.

அந்த வகையில் விநாயகபுரத்தில் ஒரு வித்தியாசமான முறையில் சிறீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் தலைவர் சத்தியசிவம் அவரது பெற்றோரான

பாலையா இந்திராணி ஞாபகார்த்தமாக விநாயகபுரம் மயானத்திலே பிரேத மாடத்தை நிர்மாணித்துக் கொடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சண்டையில் 14 படையினர் உயிரிழப்பு

## சிரியாவில் தொடரும் மோதல்களால் பதற்றம்!

டமாஸ்கஸ், டிசெ.28

**சிரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 14 படையினர், போராளிகள் குழுவைச் சேர்ந்த மூவர் என மொத்தம் 17 பேர் பலியாகினர். மேலும், பலர் படுகாய மடைந்தனர். இதனால், அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.**

சிரியாவின்கிர்பெத் அல்- மாஸா பகுதியில் முன்னாள் ஆட்சி அதிகாரியான முகமது கன்ஜோ ஹசனை கைது செய்ய இராணுவ நடவடிக்கைத்துறையின் கீழ் பாதுகாப்புப்படையின் ரோந்து குழு முயன்றது. அப்போது ஹசனின் ஆதரவாளர்கள் மற்றும் உள்ளூரை சேர்ந்த துப்பாக்கி ஏந்திய போராளிகள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதற்குப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் 14 படையினர் உயிரிழந்தனர். மேலும், 3 போராளிகள் கொல்லப்பட்டதாகவும், பலருக்கு படுகாயம் ஏற்பட்டதாகவும் சிரியாவின் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த நிலையில் ஜனாதிபதி பஷிர் அல் ஆசாத் தலைமையிலான அரசு கடந்த 8ஆம் திகதி கவிழ்ந்தது.

அபு முகமது அல் ஜவ்லானி தலை மையிலான ஹயத் தஹிர் அல் ஷம் என்ற கிளர்ச்சிக்குழு சிரியா வில் ஆட்சியைக் கைப்பற்றி யது. ஜனாதிபதியாக இருந்த பஷிர் அல் ஆசாத் ரஷ்யா தப்பிச்சென்றார்.

(எ)

மே 9 வன்முறை தொடர்பில்

# பாகிஸ்தானில் மேலும் 60 பேருக்கு தண்டனை

இஸ்லாமாபாத், டிசெ.28

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு மே 9ஆம் திகதி அவரது ஆதரவாளர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியது. இராணுவ நிலைகள் மற்றும் இராணுவத் தலைமையகம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பான வழக்குகளை விசாரித்த இராணுவ நீதிமன்றம், உயர் நீதிமன்ற அனுமதியைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்குகின்றது. கடந்த வாரம் 25 பேருக்கு இரண்டு ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நிலையில், மேலும் 60 பேருக்கு இரண்டு ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக இராணுவம் நேற்று அறிவித்துள்ளது.

தண்டனை பெற்றவர்களில் இம்ரான் கானின் உறவினர் ஹசன் கான் நியாசியும் ஒருவர். லாகூர் படைப்பிரிவு தளபதியின் ஜின்னா இல்லம் மீதான தாக்குதல் தொடர்பான வழக்கில் அவருக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் மே 9 வன்முறை தொடர்பான வழக்குகளின் விசாரணை நிறைவு பெற்றுள்ளது.(எ)

# ஏமனிலிருந்து இஸ்ரேல்மீது ஏவுகணை வீசி தாக்குதல்

ஜெருசலேம், டிசெ. 28

ஏமனிலிருந்து இஸ்ரேல் மீது நேற்று ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

மத்திய இஸ்ரேலின் பல்வேறு பகுதிகளை குறிவைத்து இந்த ஏவுகணை தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது. ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலை நடத்தினர்.

இந்த ஏவுகணைகளை இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பு நடுவானில் சுட்டு வீழ்த்தியது. ஆனால், இந்த ஏவுகணை தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

(எ)


# ஆறு முறை சாட்டையால் அடித்த அண்ணாமலை!

சென்னை,டிசெ.28

சாட்டையால் தன்னைத் தானே அடித்து தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணா மலை போராட்டம் நடத் தினார்.

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம், தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலையையும், கொந்த ளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தை கண்டித்து பல்வேறு மாணவர் அமைப் பினரும், அரசியல் கட்சியின ரும் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து 6 முறை சாட்டையால் அடித்து போராட்டம் நடத்துவேன் என்றும் தி. மு. க. ஆட்சியை அகற்றும் வரை நான் காலணிகள் அணிய மாட்டேன். இன்று முதல் 48 நாட்களுக்கு நான் விரதம் இருந்து அறுபடை முருகன் கோவில்களுக்கு சென்று, முருகப்பெருமானிடம்



முறையிடப்போகிறேன் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இந்த நிலையில், மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து 6 முறை சாட்டையால் தன்னைத்தானே அடித்து அண்ணாமலை "போராட்டம் நடத்தினார். மேல் சட்டை அணியாமல், பச்சை வேட்டி அணிந்து கோவையில் உள்ள அவரது வீட்டின் முன்பு இந்த போராட்டத்தை நடத்தினார்.

அண்ணாமலை சாட்டையால் அடிக்கும்போது அங்கு கூடி யிருந்த பா. ஜ. க. தொண்டர் கள் வெற்றிவேல், வீரவேல் என முழக்கமிட்டனர்.

(எ)

# ஜப்பான் ஏர்லைன்ஸில் சைபர் தாக்குதல்

## பற்றுச்சீட்டு விற்பனை நிறுத்தம்

ரோக்கியோ, டிசெ.28

ஜப்பான் ஏர்லைன்ஸ் சைபர் தாக்குதலுக்குள்ளான நிலையில் பற்றுச்சீட்டு விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்நாட்டு, சர்வதேச விமான போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜப்பான் ஏர்லைன்ஸ் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை 7. 25 மணிக்கு ஜப்பான் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இது உள்நாட்டு, சர்வதேச விமான சேவைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிலைமை சீரானதும் நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு அது குறித்த தகவலைப் பகிர் கிறோம். சிரமத்துக்கு வருந்துகிறோம்" என்று தெரிவித்திருந்தது.

(எ)

# பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே 'உலகின் மிகப் பெரிய அணை'

## ஒப்புதல் வழங்கியது சீனா

பீஜிங், டிசெ. 28

திபெத்தில் உள்ள பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே உலகின் மிகப் பெரிய அணையை எழுப்ப சீனா தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சீனாவின் இந்தத் திட்டம் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தும் எனச் சொல்லப்படுகிறது.

பிரம்மபுத்திரா நதி, அருணாச்சல பிரதேசம் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்து வடகிழக்கு மாநிலங்கள் வழியாக, பங்களாதேஷ் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடா கடலில் கலக்கும். இது உலகின் மிக நீண்ட நதிகளில் ஒன்று. திபெத் பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சீனா, பிரம்மபுத்திரா நதி நீரை வறட்சியான பகுதிகளுக்கு திருப்பி விடும் திட்டங்களை ஏற்கனவே செயல்படுத்தி வருகிறது.

முன்னரே, மிகப் பெரிய அணையை பிரம்மபுத்திராவின் குறுக்கே கட்ட சீனா திட்டமிட்டிருந்தது. இதன்மூலம் உலகின் மிகப் பெரிய நீர்மின் திட்டத்தை செயல்படுத்தவும் ஏற்பாடு செய்தது. இதையடுத்து, திபெத்தில் உள்ள பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே, உலகின் மிகப் பெரிய அணையை எழுப்ப சீனா தற்போது ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தில் பிரம்மபுத்திரா நதியில் இந்தியா அணை கட்டுவது குறிப்பிடத்தக்கது.

(எ)

# மன்மோகன் சிங் மறைவு நாட்டுக்கே பேரிழப்பு

## பிரதமர் மோடி புகழஞ்சலி




புதுடில்லி, டிசெ.28

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அஞ்சலி செலுத்தினார். பின்னர் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். மேலும், "மன்மோகன் சிங் மறைவு நாட்டுக்கே பேரிழப்பு"என பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 164 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பு இந்தியா தடுமாற்றம், ஆஸி ஆதிக்கம்




மெல்பேர்ண், டிசெ.28

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நாலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இந்தியா 164 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி "பார்டர்-கவாஸ்கர்" கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இந்த நிலையில் இரு அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ணில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 86 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அவுஸ்திரேலியா தரப்பில் ஸ்டீவ் ஸ்மித் 68 ஓட்டங்களுடனும், கம்மின்ஸ் 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்தியா தரப்பில் பும்ரா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

நேற்று 2ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியா தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. அபாரமாக விளையாடிய ஸ்மித் சதம் அடித்து அசத்தினார். மறுபுறம் கம்மின்ஸ் 49, ஸ்டார்க் 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். நிதானமாக விளையாடி வந்த ஸ்மித் 140 ஓட்டங்களில் ஆட்டமிழக்க 122. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட் களையும் இழந்து 474 ஓட்டங்கள் சேர்த்தது அவுஸ்திரேலியா.


இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட்கள், ஜடேஜா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸை விளையாடியது. இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வால் மற்றும் ரோஹித் ஆகியோர் களமிறங்கினர். இதில் ரோஹித் 3 ஓட்டங்களிலும், அடுத்து வந்த ராகுல் 24 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஜெய்ஸ்வால் மற்றும் கோலி இருவரும் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். இதில் ஜெய்ஸ்வால் அரைச்சதம் அடித்தார். நேற்றைய நாள் ஆட்டம் முடியும் தருவாயில் ஜெய்ஸ்வால் 82 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழந்து சிறிது நேரத்திலேயே கோலி 36 ஓட்டங்களிலும், ஆகாஷ் தீப் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து ரிஷப் பண்ட் மற்றும் ஜடேஜா ஜோடி சேர்ந்து மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்து கொண்டனர். இறுதியில் 2ஆம் நாள் முடிவில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 46 ஓவர்களில் 5 விக்கெட் களை இழந்து 164 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

பண்ட் 6 ஓட்டங்களுடனும், ஜடேஜா 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்திய அணி இன்னும் 310 ஓட்டங் கள் பின்னிலையில் உள்ளது. அவுஸ்திரேலியா தரப்பில் கம்மின்ஸ், போலண்ட் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இன்று 3ஆம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. (எ)

# "என்னை பொறுத்தவரை பிரியாவிடைகள் தவறு!"




சென்னை, டிசெ.28

"என்னைப் பொறுத்த வரை பிரமாண்டமான பிரியாவிடைகள் தவறானது. நீங்கள் யாருக்கும் அதைக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் கெரியரின் இறுதியில் யாரும் ஒரு துளி கண்ணீர் விடுவதை நான் விரும்பவில்லை என இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

பிரியாவிடை என்பது நட்சத்திர கலாசாரத்தின் ஒரு பகுதி என்று நினைக்கிறேன். நாம் ஏன் ஒருவருடைய பின்னே செல்ல வேண்டும்? அவர்கள் மீது இருக்கும் அன்பை பற்றி நான் புரிந்து கொள்கிறேன்.

ஆனால், உண்மையில் அந்த நபர்களின் சாதனைகள், மரபு ஆகியவை மட்டுமே உத்வேகமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பிரியாவிடை என்பது தவறானது. என்னைக் கொண்டாடும் வகையில் ஒரு போட்டி நடத்தப்பட்டால் அது விளையாட்டுக்கு அவமதிப்பு என்று நினைக்கிறேன். ஓய்வு மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை. சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 537 விக்கெட்கள் வீழ்த்தியும் மகிழ்ச்சியாக இல்லையென்றால், பின்னர் எதற்குத்தான் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்?- என்று அஸ்வின் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# 4 விக்கெட் இழப்புக்கு 363 ஓட்டங்கள் குவிப்பு

## சிம்பாவே திடீர் எழுச்சி



புலவாயோ, டிசெ.28

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் முதல் நாளில் 4 விக்கெட்கள் மட்டும் இழந்து 363 ஓட்டங்கள் குவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான பொக்ஸிங் டே டெஸ்ட் நேற்று முன்தினம் தொடங்கி யது.இதன் படி, முதலில் களமிறங்கிய சிம்பாவே தொடக்கம் முதலே அதிரடியாக ஆடியது.

தொடக்க ஆட்டக்காரர் பென் கர்ரன் பொறுப்புடன் விளையாடி அரைச்சதம் கடந்து 68 ஓட்டங்களில் வெளியேறினார். சீன் வில்லியம்ஸ் சிறப்பாக ஆடி சதமடித்தார்.

அணித் தலைவர் கிரெய்க் எர்வின் அரைச் சதம் கடந்தார். இறுதியில், முதல் நாள் ஆட்ட நேர முடிவில் சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 363 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சீன் வில்லியம்ஸ் 145 ஓட்டங்களுடனும், எர்வின் 56 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந் தனர். இந்த நிலையில் நேற்று 154 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சீன் வில்லியம்ஸ் ஆட்டமிழந்தார். இருப்பினும் 5 விக்கெட்கள் மட்டும் இழந்த நிலையில் சிம்பாவே அணி 431 ஓட்டங்கள் குவித்து தொடர்ந்து விளையாடி வருகிறது. (எ)

# வெறும் 211 ஓட்டங்களுக்கு சுருண்டது பாகிஸ்தான்

## தென்னாபிரிக்கா அபார பந்துவீச்சு

சென்சூரியன், டிசெ.28

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 211 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில்,

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் சென்சூரியனில் தொடங்கியது. இதன்படி பாகிஸ்தான் அணி அதன் முதல் இன்னிங்ஸில் 211 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக கம்ரான் குலாம் அரைச்சதம் கடந்து அசத்தினார். அவர் 71 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து, அமர் ஜமால் 28 ஓட்டங்களும், முகமது ரிஸ்வான் 27 ஓட்டங்களும் எடுத்தனர். தென்னாபிரிக்கா அணியின் சார்பில் அதிகபட்சமாக டேன் பீற்றர்சன் 5 விக்கெட்களைக் கைப்பற்றி அசத்தினார். அவரைத் தொடர்ந்து, கார்பின் போஸ்ச் 4 விக்கெட்களையும், மார்க்கோ ஜான்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்களை இழந்து 82 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக மார்க்ரம் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். அவருடன்




அணித் தலைவர் பவுமா 4 ஓட்டங் களுடன் களத்தில் இருந்தார். பாகிஸ் தான் அணியில் அதிகபட் சமாக ஷெஷாத் 2 விக்கெட் களும், முகமது அப்பாஸ் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.இதன்மூலம் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில், பாகிஸ்தான் அணியை விட 129 ஓட்டங் கள் பின்தங்கியிருந்தது. நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து துடுப் பெடுத்தாடிய தென்னா பிரிக்கா 3 விக்கெட்கள் இழந்து 118 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மார்க்கம் 69 ஓட்டங் களுடனும் பவுமா 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.(எ)

# 4000 ஓட்டங்களை கடந்து பாபர் அஸாம் சாதனை

சென்சூரியன், டிசெ.28

மூன்று வடிவ கிரிக்கெட் போட்டிகளிலும் 4000 ஓட்டங்களைக் கடந்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர்பாபர்அஸாம் சாதனை படைத் துள்ளார்.



தற்போது நடைபெற்று வரும்தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸில் முன்னணி வீரரான பாபர் அஸாம் வெறும் 4 ஓட்டங் களில் ஆட்டமிழந்தார். இருப்பினும், அவர் டெஸ்ட் கிரிக் கெட் போட்டிகளில் 4000 ஓட்டங் களை கடந்தார். இதன் மூலம் சர்வதேச அளவில் விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோருக்கு பின்னர் 3ஆவது வீரராக வரலாற்று சாதனையை பாபர் அஸாம் நிகழ்த் தியுள்ளார்.

அதாவது, மூன்று விதமான கிரிக்கெட் (டெஸ்ட், ஒருநாள், ரி- 20) போட்டிகளிலும் சர்வதேச அளவில் 4000 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டிய 3ஆவது வீரர் மற்றும் முதல் பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையை பெற்றார். இந்த சாதனை பட்டியலில் முதல் இரு இடங்களில் இந்திய வீரர்களான விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறி...

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தை பதிவு செய்யவும், ஆலயத்திற்கான காணியை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவிக்கவும், ஆலய வளாகத்தில் குழாய்க்கிணறு அமைப்பதற்கான அனுமதியை வழங்கவும், ஆலயத்திற்கான பிரதான வீதியை சீரமைக்கவும், மலையுச்சியிலுள்ள சிவலிங்கத்திற்கு ஏற்னவே இருந்ததைப்போல சிறிய கூடாரம் அமைக்க அனுமதியளிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கோ, பொதுமக்கள் சென்றுவருவதற்கோ எவ்வித தடையுமில்லை என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்ற போதும், இந்த ஆலயத்துக்குச் செல்வதற்கான பிரதான வீதி மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த கால ஆட்சியாளர்கள் அவ் வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கமானது அவ்வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.(அ)

## அரிசி...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரிசி தொடர்பில் சில இடங்களில் பிரச்னைகள் உள்ளன. அதிகமான இடங்களில் பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அரிசிக்கு பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் இந்தப் பிரச்னையை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சந்தையில் விலை தளம்பல் ஏற்பட்டால் அதனை சமநிலைப்படுத்த அரசாங்கம் பலத்தை கொண்டிருக்க வேண்டும். எதிர்வரும் போகம் முதல் குறிப்பிடத்தக்களவு நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதேபோன்று விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அவர்களை காப்பாற்ற வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டால் அரிசியை இறக்குமதி செய்யவும் நாம் பின்நிற்க போவதில்லை.

இந்த மாதத்தின் பின்னர் அரிசி விலை உயர்வடையாது. அத்துடன், பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் முகாமைத்துவம் செய்யவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

## அரச...

பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின் னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் 16 அம்ச நிபந்தனைகளில் நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கமும் மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு அவதானம் செலுத்தியுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த பட்டியலில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லிட்ரோ நிறுவனம் உள்ளிட்ட இலாபமடையும் பல நிறுவனங்கள் உள்ளன.

அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

ஆகவே சந்தர்ப்பத்துக்கு ஏற்றால் போல் அரசியல் கொள்கையை ஜனாதிபதி மாற்றிக் கொள்ளக் கூடாது என்று வலியுறுத்துகிறோம் - என்றார். (அ)

## மருத்துவத்...

உலகிலும் இலங்கையிலும் சர்வதேச நுன்னுயிர்கொல்லியினால் இழக்கப்படும் உயிர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

2019ஆம் ஆண்டு அண்ணளவாக இந்த நோயினால் 2300 பேர் பலியாகியுள்ளனர்.

அதேபோன்று நாட்டுக்கு மருந்து இறக்குமதி செய்யப்படும்போதும் பகிர்ந்தளிக்கும் போதும் அதற்கான அனுமதி மருந்து கட்டுப்பாட்டுப் பிரிவுக்கே வழங்கப்பட்டுள்ளது. மருந்து கொள்வனவு, பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை ஸ்திரப்படுத்தவேண்டும். அதற்கான சட்டங்களை வலுப்படுத்த வேண்டும். தேவையற்ற மருந்துக் கொள்வனவால் நாட்டில் பொருளாதார நிலை பாதிக்கப்படுகிறது.

சுகாதாரதுறைக்கென அதிகளவு நிதி ஒதுக்கப்படுகிறது.அதனை சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும் - என்றார்.

## இலங்கை...

எட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. அந்த தீர்மானத்துக்கான கலந்துரையாடல் எப்போது எங்கிருந்து ஆரம்பிக்கப்படும்?" என கேள்வி எழுப்பியவேளை அதற்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

பேச்சுவார்த்தை எல்லாம் முடிந்துவிட்டது. இனி பேச்சுவார்த்தை எதுவும் இல்லை. மீன்பிடி அமைச்சில் இருக்கின்ற அதிகாரிகளும் இந்தியாவில் இருக்கின்ற அதிகாரிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. அந்த பேச்சுவார்த்தைகள் தொடரும். அதில் தொழில்நுட்ப ரீதியான பிரச்னைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் பேசப்படுகின்றன.

மனிதாபிமான உதவிகளை வாங்குவதோ கொடுப்பதோ தொடர்பாக ஒரு பேச்சுவார்த்தைக்கு நாங்கள் செல்லப் போவதில்லை. இதுதான் எங்களது மனிதாபிமான நடவடிக்கை என நாங்கள் கூறுகின்றோம் - என்றார். (அ-05)

## தேசிய...

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வருடாந்தரம் ஏற்பாடு செய்யப்படும் சபரிமலை யாத்திரைக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகளவிலான பக்தர்களை இணைத்துக் கொள்ளவும், அதற்கு அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அனுசரணையைப் பெற்றுத்தருமாறும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர் ஹினிதும சுனில் செனவி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

## தேசிய புலனாய்வு...

அமைப்புக்கள் ஆகியன தமக்கு நகரப் பகுதியில் காணி ஒதுக்கித் தருமாறு வவுனியா பிரதேச செயலகத்திடம் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத் திருந்தன.

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் ஆகியவற்றை பிரித்து வழங்குவது தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனுமதி கோரப்பட்டிருந்தது.

எனினும் குறித்த காணி விடயத்தில் தேசிய புலனாய்வு அலுவலகத்தின் காணிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## ஏப்ரல்...

தேர்தலை மார்ச் மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் அக்காலப் பகுதியில் சாதாரணதரப் பரீட்சை நடைபெறுவதால் ஏப்ரல் மாதமே பொருத்தமான காலப்பகுதியென கருதப்படுகின்றது.

இதன் அடிப்படையிலேயே தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

பாராளுமன்றத்தில் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு, தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிடவுள்ளது. (அ)

## தமிழர்...

ஊடாக தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்தார். யுத்த வெற்றியை 2010 ஆம் ஆண்டு தேர்தலின் வெற்றிக்காக பயன்படுத்தினாரே தவிர நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு பயன்படுத்தவில்லை.

அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி இந்த நாட்டின் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ நினைத்திருந்தால் 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே புதிய அரசிய லமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும். ஒரு தரப்பினரது தவறான ஆலோசனைக ளால் புதிய அரசியலமைப்பு குறித்து அவர் அக்கறை கொள்ளவில்லை.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இருப்பினும் அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன பெரமுன அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி இனவாத அடிப்படையில் செயற்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து பேச்சளவில் கூட கவனம் செலுத்தவில்லை. தமிழர்களுக்கு எதிராக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் செயற்பட்டார்.

இவ்வாறான இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த அரசாங்கத்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டேன். 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி நாட்டு மக்கள் மத்தியில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது.

.இடைக்கால ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவை புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது நானும் சென்றிருந்தேன். புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும்.

தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.அப்போது சமஷ்டி ஆட்சி முறைமை தொடர்பில் கேள்வியெழுப்பியபோது சமஷ்டி ஆட்சி முறைமையை தான் எதிர்ப்பதாக குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பாரம்பரியமான அரசியல் முறைமைக்கு முடிவு கட்டியுள்ளது. புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறு தியளித்துள்ளார். நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்.

தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே கடந்த கால தவறுகள் புதிய அரசியலமைப்பின் ஊடாக திருத்தியமைக்கப்பட வேண்டும். அப்போது தான் நாடு [illegible] ரீதியில் முன்னேற்றமடைய முடியும் - என்றார். (அ)

## அநுர...

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் சீன நிதியுதவியின் கீழ் 1996 வீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மொறட்டுவை பெடரிவத்த பகுதியில் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் ஊடாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கென 575 வீடுகள் மற்றும் கொட்டாவ பகுதியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ள வீடமைப்பு திட்டத்தின் ஊடாக 108 வீடுகள் மூத்த கலைஞர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இதன் இரண்டாம் கட்டம் தெமட்டகொட மற்றும் மஹரகம பகுதியலும் மூன்றாவது கட்டம் பெலியகொட பகுதியிலும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் இந்த வீடமைப்பு திட்டத்தின் முதற்கட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு மொரட்டுவை பெட ரிவத்த பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான சீனத்தூதுவர் சீ ஜென் ஹொங் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது உரையாற்றுகையிலேயே சீனத்தூதுவர் கீ சென்ஹொங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ)

## உள்ளூர்...

மாவட்ட மொத்த - சில்லறை அரிசி வியாபாரிகளுடன் விலை நிர்ணய கட்டுப்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுவாக அரிசி விலை தொடர்பாக கடந்த திங்கட்கிழமை இலங்கை அரசாங்கத்தினால் வர்த்தமானி வெளியிடப்பட்டு உள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மீண்டும் வடமாகாணத்துக்கு வருகின்றது.

உள்ளூர் உற்பத்தி அரிசி இனங்கள் போதியளவு கையிருப்பில் இருக்கின்றன. விலையில் மாற்றங்கள் இல்லை. உள்ளூர் மக்கள் பாவிக்கின்ற அரிசியை எந்த விதமான தட்டுப்பாடும் இன்றி கொள்வனவு செய்து கொள்ளமுடியும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வெள்ளைப் பச்சை அரிசி , சம்பா இன அரிசிகள் பாரிய பிரச்னையாக இருக்கின்றன. அரசாங்கம் ஒரு விலையை நிர்ணயம் செய்துள்ளனர். அதில் மொத்த, சில் லறை வியாபாரிகள் விற்கமுடியாத சூழ் நிலையில் இருக்கின்றனர்.

மொத்த வியாபார விலையாக ஒரு கிலோ வெள்ளைப் பச்சை, அல்லது சம்பா இன அரிசிகள் 215 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. சில்லறை விலையாக 220 ரூபா நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதாக இருந்தால் கிலோவுக்கு 05 ரூபா செலவாகின்றது. அதனை விட கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் எற்றி - இறக்க 01ரூபா செலவாகின்றது.

போக்குவரத்துச் செலவினமாக மொத்தமாக 06 ரூபா செலவாகின்றது. மொத்த - சில்லறை வியாபாரிகள் இலாபமாக 04 ரூபாவினை எதிர்பார்க்கின்றனர். கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கு இடையில் அரிசியினை எற்றி - இறக்க போக்குவரத்து செலவினங்கள் உள்ளிட்ட இலாபமாக 10 ரூபாவினை எதிர்பார்க்கின்றனர்.

இதன் அடிப்படையிலே வியாபாரிகள் எமக்கு முறைப்பாடு செய்த பின்னர் சில்லறை - மொத்த வியாபாரிகளை அழைத்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

வெளி மாவட்டங்களில் இருந்து வட மாகாணத்துக்கு வரும் அரிசியினை விற்கமுடியாது. இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புடன் கதைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கல்விக்கும், சுகாதாரத்துக்கும் பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கீடு

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்



கிளிநொச்சி, டிசெ. 28

இந்த முறை பாதீட்டில் கல்விக்கும், சுகாதாரத்துக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாகக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் எதிர்கால திட்டமிடல் இல்லாமல் உள்ளமை கவலையளிக்கிறது.

அவ்வாறான திட்டமிடல்கள் மூலமே முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும் எனவும் அமைச்சர் சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## சீன அரசால் இலங்கைக்கு 552 மில்லியன் ரூபாய் நிதி!

கொழும்பு, டிசெ. 28

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 552 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் கலைஞர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்த நிதி வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பான வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நடவடிக்கைகள் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த நிதியின் மூலம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1,888 வீடுகளையும், கலைஞர்களுக்கு 108 வீடுகளையும் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## மன்மோகன் மறைவுக்கு ஜனாதிபதி அநுர இரங்கல்!

கொழும்பு, டிசெ. 28

இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தனது எக்ஸ் கணக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் ஜனாதிபதி,

நான் எனது சார்பிலும், இலங்கை மக்கள் சார்பிலும் இந்தியக் குடியரசுக்கும், கலாநிதி. மன்மோகன் சிங்கின் குடும்பத்தாருக்கும், உலகெங்கிலும் அவர் மீதான பற்றை வெளிப்படுத்தும் எண்ணற்றவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறேன்.

தொலைநோக்கு கொண்ட தலைவரான கலாநிதி மன்மோகன் சிங்கின் வழிகாட்டல் இந்தியாவிற்குள் மாத்திரம் மட்டுப்படவில்லை.

2004 முதல் 2014 வரை இந்தியாவின் பிரதமராக அவர் செயல்படுத்திய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலைவாய்ப்பு செயல்திட்டம் போன்ற மாற்றத்துக்கான திட்டங்கள் என்பன சமத்துவம், தலையீடு தொடர்பிலான அவரது உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

சர்வதேச ஒத்துழைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய காலாநிதி மன்மோகன் சிங், நீண்டகால கூட்டுறவு கூட்டணிகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் பிரிக்ஸ் போன்ற அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்தியா, அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்கள் மூலம் அவரது சிறந்த இராஜதந்திரம் தெரிகிறது. அவரது தன்னடக்கம், அறிவாற்றல் மற்றும் அரச சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியன நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நிலையான முன்மாதிரியாகவும் ஊக்குவிப்பாகவும் அமையும். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும் - என்று பதிவிட்டுள்ளார். (அ)

# வவுனியாவும் வடக்கு மாகாணம் என உயர் அதிகாரிகள் உணரவேண்டும்!

### திலகநாதன் எம்.பி சுட்டிக்காட்டு

வவுனியா, டிசெ. 28

**வடக்கு மாகாணத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் வவுனியாவும் வடக்கு மாகாணம் என்று உணர்ந்து கடமையாற்ற வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.**

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

சூடுவெந்தபுலவு பகுதியில் உள்ள பாடசாலையில் தகவல் தொடர்பாடல் பாடம் கற்பித்த ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய ஆசிரியர் நியமிக்கப்பட்டு 6 மாதம் கடந்தும் அவர் அங்கு செல்லவில்லை. இதனால் அந்த மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்து நாகரிக பாடத்துக்கு ஆசிரியர் இல்லை. ஏன் அந்த வெற்றிடம் நிரப்பபடவில்லை. வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்கள் பற்றாக்குறை. யாழ்ப்பாண மாவட்டத்தில் 87 கணித பாட ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் வடக்கு மாகாணம் என்றால் யாழ்.மாவட்டம் மட்டும் தான் என்றா நினைக்கிறார்கள். வவுனியாவும் வடக்கு மாகாணம் தான். இனிமேல் இவ்வாறான கூட்டங்களுக்கும் மாகாணப் பணிப்பாளர்களையும் அழைக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு இது விளங்கும்.

பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறை இருந்தால் விவரத்துடன் தாருங்கள். நாம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுடன் கதைக்கின்றோம். கிராமப்புற பாடசாலைகளில் சில மாணவர்கள் கல்விப் பொது சாதா ரண தரப் பரீட்சை எழுத முடியாத நிலையில் உள்ளனர். அடிப்படை கல்வி கூட அவர்களுக்கு வழங்கப் படவில்லை.

தூர இடங்களில் இருந்தும் வரும் ஆசிரியர்கள் ஒரு பஸ் மாறி வரும் அளவுக்கு தான் இடமாற்றங்களை வழங்குங்கள். சில ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு பஸ்களில் சென்றே கற்பிக்கின்றார்கள். பஸ் தாமதமாக சென்றால் கைவிரல் அடையாளம் வைக்கும்போது தாமத வருகையாக அது பதிவாகிறது.


இதனால் காலையிலேயே அந்த ஆசிரியர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டால் எவ்வாறு சிறந்த கல்வியை வழங்க முடியும் - என்றார். (அ)

# மன்மோகன் சிங்கின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார் ரணில்!

புதுடில்லி, டிசெ. 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடலுக்கு நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். உடல் நலக்குறைவால் தனது 92ஆவது வயதில் உயிரிழந்த முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல் டில்லியிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிற்றுக் கிழமை தனிப்பட்ட விஜயமாக டில்லி சென்றார். நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தியாவின் மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவேந்தல் உரையை ஆற்றுவதற்காக அவர் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.



இந்நிலையிலேயே அவர் மன்மோகன் சிங்கின் உடலுக்கும் அஞ்சலி செலுத்தியுள்ளார். மேலும் மறைந்த முன்னாள் பிரதமரின் மனைவி குர்ஷரன் கௌர் கோலியை சந்தித்து, அவரது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் அங்கு வருகை தந்திருந்த இந்திய எதிர்க் கட்சி தலைவர் ராகுல் காந்தியுடனும் முன்னாள் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். (அ)

# பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அரசாங்கம் வலுவான அரசியல் அர்ப்பணிப்பு

### தொழில் அமைச்சர் அனில் ஜயந்த

கொழும்பு, டிசெ. 28

புதிய அரசாங்கம் நாட்டை பொருளாதார ஸ்திரத் தன்மையை நோக்கி நகர்த்துவதற்கான வலுவான அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. நிதி ஸ்திரத்தன்மைக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சுயாதீனமான மூன்றாம் தரப்பினரால் பாராட்டப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப தரப்படுத்தல்களும் உயர்த்தப்பட்டுள்ளன என தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னைய ஆட்சிகள் உருவாக்கிய படுகுழியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவது முக்கியமானது. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த வேளையில், நெருக்கடிக்கு காரணமாக இருந்தவர்கள் 2022 ஏப்ரலில் ஒருதலைப்பட்சமாக வெளிநாட்டுக் கடன் பெறுவதை நிறுத்தியிருந்ததுடன், 4 வருட காலத்திற்குள் 8 தவணைகளாக கிடைக்கப்பெறவிருந்த 3 பில்லியன் டொலர்கள் வரையிலான நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் நுழைந்திருந்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடன் ஆகியவை நிலைத்தன்மை பகுப்பாய்விற்கு ஏற்ப மறுசீரமைப்பு செயல்முறை மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் தாமதிப்பு மற்றும் கடினமான தன்மை காரணமாக நாடு மேலதிகச் செலவுகளைச் செய்ய வேண்டியிருந்ததுடன் மக்கள் மீதான அதிக சுமை அதிகப்படுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் பின்னர் சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டத்துக்கு அமைய அப்போதைய நிலைமைகளின் நன்மை, தீமைகள் என்ற இரண்டையும் கருத்தில் கொண்டு நாட்டு மக்களின் நலனுக்கான மாற்றீடுகளுடன் அரசாங்கம் முன்னோக்கி பயணிக்கிறது.

அதன்படி, வேலைத்திட்டத்தின் அளவுகோள் மற்றும் அரச வருமான வழிமுறைகளுக்கு அமைய உரிய தலையீடு மற்றும் காலோசிதமான முறையில் வசதிகளை வழங்குவதன் ஊடாக 2024 நவம்பர் 26 ஆம் திகதி மூன்றாவது மீளாய்வில் பணிக்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டினை எட்ட முடிந்தது. சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபை அனுமதிக்கு முன்னதாக நுகுகு இன் அடுத்த தவணையைப் பெற்றுகொள்வதற்கு அரசாங்கம் உரிய பங்குதாரர்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.